கோத்தகிரியில் நீதிமன்றம்.

3—

*4606 திரு. எச். எம். ராஜு:

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், கோத்தகிரியில் அமையவிருக்கும் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைக்க உள்ளது. கோத்தகிரியில் உரிமையில் நீதிமன்றம் அமைப்பது சம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்தோடு கலந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

முற்பகல் 10-30

திரு. எச். எம் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் 100-வது நாள் வெற்றிகரமான ஆட்சிக்கு இந்திய தேசியக் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகவும் எங்களுடைய சார்பாகவும் எங்களுடைய நல்வாழ்த்துக் களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், கோத்தகிரியில் அமையவிருக்கும் குற்றவியல் நீதிமன்றம் பற்றியும், உரிமையியல் நீதிமன்றம் பற்றியும் தெரிவித் தார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1984-லே எங்கள் மாவட்டத்திற்கு செஷன்ஸ் கோர்ட் கொடுத்து, குற்றவியல் நீதி மன்றம் நடந்துவந்த குன்னூருக்கு உரிமையியல் நீதிமன்றத் தையும் கொடுத்தார்கள். தெங்குமாரஹாடா என்ற பகுதியில் உள்ள மக்கள் உதகமண்டலத்திலிருந்து வர, குன்னூருக்கு வர பெரியார் மாவட்டத்தை தாண்டி, கோவை மாவட்டத்தை தாண்டி

1991 அக்டோபர் 1]

வந்துகொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் அவர்களுக்கு வசதியாக இருக்கும்படியாக உரிமையியல், குற்றவியல் நீதிமன்றங்கள் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து அந்த நீதிமன்றங்களைக் கோத்தகிரி பகுதி மக்களுக்கு இந்த நிதி ஆண்டில் ஏற்படுத்த தமிழக அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல கோத்தகிரியில் இந்த ஆண்டு நம்முடைய போற்றுதற்குரிய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பார்ட்-2 ஸ்கீமில் ஒரு குற்றவியல் நீதிமன்றம் அமைய ஆணையிட்டிருக்கிறார்கள். அது விரைவில் தொடங்கும். அதில் 14 பேர், நீதிபதி உட்பட, செயல்படுவார்கள். அதனுடைய தொடர் செலவு ரூ. 4,29,000. தொடராச் செலவு ரூ. 75,000. அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலம், கூடலூர், குன்னூர், கோத்தகிரி ஆகிய இந்த நான்கு பகுதிகள்தான் கேந்திரமான பகுதிகள். இதில் கூடலூரில் ஏற்கெனவே நீதிமன்றம் இருக்கிறது, உதகமண்டலத்தில் ஏற்கெனவே நீதிமன்றம் இருக்கிறது, குன்னூரில் ஏற்கெனவே நீதிமன்றம் இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் இப்போது குற்றவியல் நீதிமன்றம் கோத்தகிரியில் தொடங்கப்படுகிறது. அடுத்த ஆண்டு உரிமையியல் நீதிமன்றம் தொடங்கி, முழுமையாக மலைராணி என்று கருதப்படும் நீலகிரியில் எல்லா நீதிமன்றங்களும் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் அமையும் என்பதை உறுதியுடன் சொல்கிறேன்.

திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுடைய பதிலைக் கேட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த நல்ல தினத்திலே கோத்தகிரி வட்டத்திற்கு அருகில் இருக்கும் நடுஹட்டி ஊராட்சி மக்களுடைய நலன் கருதி அவர்களையும் இந்த கோர்ட் ஜூரிஸ்டிக்ஷனில் எடுத்துக் கொள்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1991 அக்டோபர் 1

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை கவனத்தில் வைத்துக்கொண்டு, அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, ஆவன செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் 100-வது நாளைக் கொண்டாடும் இந்த வேளையில், அதனால் மலர்ந்திருக்கும் மக்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய 9150-வது ஆட்சி நாளையும் கொண்டாட வேண்டுமென்ற ஆவலுடன் இருக்கும் மக்களுக்குப் பால் வார்த்ததுபோன்று, கோத்தகிரியில் உரிமையியல், குற்றவியல் நீதிமன்றங்களை அமைப்பதற்கு நிதி ஒதுக்கியதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் நோக்கில், இதே ஆண்டில் அவற்றைக் கொடுத்தால் மலைவாழ் மக்களையும், ஏழை எளியவர்களையும், பிற்பட்ட மக்களையும் தன்னுடைய தொகுதியில் கொண்டிருக்கும் கோத்தகிரி மக்களுக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-35)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். இந்த ஆண்டே பார்ட்-2 ஸ்கீமில் நடைபெற்ற விவாதத்தில் மசோதா நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அரசு ஆணை ஒன்றிரண்டு நாட்களில் நிச்சயமாக அறிவிக்கப்படும். இந்த ஆண்டே குற்றவியல் ஜூடிசியல் மாஜிஸ்டிரேட் கோர்ட் வந்துவிடும். அடுத்த ஆண்டு டிஸ்டிரிக்ட் முன்சிப் கோர்ட் வருவதற்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.